1973 மார்ச் 3]

அமைச்சரவர்கள் அங்கே வந்திருந்தபோது அதுபற்றி ஒரு மகஜர்கூட கொடுத்தார்கள். அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி ஒரு திட்டத்தைத் தயாரிக்கும்படி தலைமைப் பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிருர்.

(திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வி கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்பைத் தடுப்பது பற்றி, அதுசம்பந்தப்பட்ட கேள்வியைக் கேளுங்கள்.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இராமேஸ்வரம்-தனுஷ்கோடி கடலரிப்பைத் தடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ? அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நமது கடல்பகுதி ரொம்ப நீளம். அதனுல் கடலைப்பற்றிக் கேட்டுக்கொண்டே போகலாம். இது மூலக்கேள்விக்கு சம்பந்தப்பட்ட கேள்வி அல்ல.

செய்யாறுக்குத் தனி கூட்டுறவு துணைப்பதிவாளர்

* 233. வினு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டம், செய்யார் கோட்டத்திற்கு ஒரு தனி கூட்டுறவு துணைப்பதிவாளர் நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : ஒரு கூட்டுறவு துணைப்பதிவாளர் வட்டம் செய்யாறுக்கு ஏற்கனவே அமைக்கப்பெற்றுள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : செய்யாற்றுக்கு புதிதாக ஒரு துணைப்பதிவாளர் நியமிக்கப்படுகின்ற அதேநேரத்தில் இராணிப்பேட்டையில் இருக்கும் கூட்டுறவுத் துணைப்பதிவாளரை மாற்றப்போவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி மாற்றுமல், இராணிப்பேட்டையில் துணைப்பதிவாளர் இருக்கும்படி ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : ஏற்கெனவே இராணிப்பேட்டையில் இருந்த துணைப்பதிவாளர் பதவி அப்படியே இருக்கிறது.

[1973 மார்ச் 3

சிறப்புச் சிற்றங்காடிகள்

* 234. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழக முக்கிய கிராமங்களில் சிறிய அளவில் கூட்டுறவுத் துறையில் சூப்பர் மார்க்கெட்டுகளைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : 1972-73-ல் 10 சிறப்புச் சிற்றங்காடிகள் துவக்க ரூ. 4.50 லட்சம் நிதியுதவி அளிக்க செயற்குறிப்பு உள்ளது.

1972–73-ல் 10 சிறப்புச் சிற்றங்காடிகள் மினி சூப்பர் மார்க்கெட்டுகள்—துவக்கப்படுவதோடு நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தின் இறுதியில் மொத்தம் 100 சிறப்புச் சிற்றங்காடிகள் செயல்பட உள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பொதுவாக இந்த சிறப்புச் சிற்றங்காடிகளில் விற்கப்படும் பண்டங்கள் நல்ல தரமானவைகளாகவும், குறைந்த விலையிலும் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த மினி சூப்பர் மார்க்கெட்டுகளை எல்லாக் கிராமப்புறங்களிலும் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : எல்லாக் கிராமங்களிலும் சிறப்புச் சிற்றங்காடிகளைத் திறக்கும் திட்டம் இப்போது இல்லை. ஆனுல் இன்றைக்கு நாள் ஒன்றுக்கு 2,000 ரூபாய்க்கு அதிகமாக விற்பனையாகக்கூடிய இடங்களில் சிறப்புச் சிற்றங்காடிகளைத் திறக்கும் திட்டம் இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது நாளுக்கு நாள் அத்தியாவசியமான பொருள்களின் விலை திடீர் திடீர் என்று உயர்ந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் இப்படித் திறக்கப்பட்டிருக்கும் கூட்டுறவு சிறப்புச் சிற்றங்காடிகளில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவை எல்லாம் நஷ்டத்தில் செயல்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, இந்த நஷ்டம் ஏற்படுவதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சரவர்கள் ஆராய்ந்து சீர் செய்ய என்ன திட்டம் வைத்திருக்கிருர்கள் ?

மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனுர் : தலைவரவர்களே, இந்த மினி சூப்பர் மார்க்கெட்டுகளில்—எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் படி, 29 சிற்றங்காடிகளில் 28 லாபத்தில் இயங்கி வருகின்றன. ஒன்று மட்டும் நஷ்டத்தில் இயங்குகிறது. அதைக்கூட சரிசெய்து கொண்டுவருகிருர்கள்.